# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8033645

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS காவல்நிலையம் V & AC Year ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 5/2017 Date: நாள் 26.7.17

2. (i) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 8.4.17 Date to : நாள் வரை 24.5.17 மற்றும் 25.7.17

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.7.17 Time : நேரம் 08.15 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : ✓ தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தூரம் 40 கி.மீ வடக்கு ஊராட்சி அலுவலகம்

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ரெட்டியம்பட்டி, வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. ஆறுமுகம் (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் பழனிச்சாமி (லேட்)

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21/17 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் ஓட்டுநர் (g) Address : முகவரி கதவு எண் 19, கோவைப்பட்டி, நாயக்கர் தெரு, ரெட்டியம்பட்டி ஒன்றியம், வேடசந்தூர் திண்டுக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. பி. ராதா. நிர்வாக அலுவலர், சமூக நலத்துறை ரெட்டியம்பட்டி. திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்ப்பிக்கிறேன்:திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளரான நான் இன்று 26.07.2017ம் தேதி காலை 08.15 மணியளவில் அலுவலகத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் அஞ்சல், கோவில்பட்டி, கதவு எண்.19, வசித்து வரும் (லேட்), பழனிச்சாமி அவர்களின் மகன் P.ஆறுமுகம், என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று விசாரித்ததில் வாதியின் உடன் பிறந்த சகோதரி செல்வராணிக்கு அன்னை தெரசா ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் ரூபாய் 50,000/- மற்றும் 1 பவுன் தங்கம் நாணயம் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை ஒன்றிய சமூக நல விரிவாக்க அலுவலர் திருமதி.ரேணுகா அவர்கள் வாதியிடம் லஞ்சமாக ரூ.2,000/- கேட்டதாக இருந்தது. மேற்படி புகாரின் நகலை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பியதின் பேரில் பூர்வாங்க விசாரணை PE.No.275/2017/SW/DL, நாள்:26.07.2017-ன்படி விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் P.E.No.275/2017/SW/DL, நாள்:26.07.2017-ன்படி பதிவு செய்யப்பட்டு பூர்வாங்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் செயலாக தலைமைக்காவலர் 1331 திரு.P.செந்தில்குமார் அவர்களை அனுப்பி குஜிலியம்பாறை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள சமூக நல விரிவாக்க அலுவலகம் சென்று எதிரி திருமதி.ரேணுகா அவர்களை சந்தித்து வாதியிடம் லஞ்சப்பணம்கேட்பது சம்மந்தமாக குரல் பதிவு செய்ய அனுப்பப்பட்டது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Arumugam 26/07/17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer Incharge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..........
Rank: நிலை .......... No. எண்

<u>திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:5/2017 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

அதன்படி வாதி வேடசந்தூர் தாலுகா, குஜிலியம்பாறை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள சமூக வளர்ச்சி விரிவாக்க அலுவலகம் சென்று எதிரியை சந்தித்தபோது நடந்த உரையாடல்கள் குரல் பதிவு செய்யப்பட்டது. அதில் எதிரி வாதியிடம் லஞ்சப்பணம் ரூ.2,000/- கேட்பது சம்மந்தமான வாதியின் புகார் மனுவின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்டது. அதன் பிறகு வாதி மற்றும் எதிரி ஆகியோர்களின் முன் நடத்தை பற்றியும் விசாரணை செய்தும், காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் ஒப்புதலை 26.07.2017ம் தேதி மதியம் 13.10 மணிக்கு பெற்றும், மேற்படி சமூக வளர்ச்சி விரிவாக்க அலுவலர் அவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 7ன் கீழ் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதால் 26.07.2017ம் தேதி பகல் 13.15 மணிக்கு திண்டுக்கல் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.05/2017, பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் 1988ன்படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் விபரம் பின்வருமாறு பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல், நான், மேற்சொன்ன முகவரியில் எனது தம்பியுடன் வசித்து வருகின்றேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 பேர், அதில் மூன்று பெண் மற்றும் ஒரு ஆண் ஆவார். எனது அம்மா கடந்த 2004-ம் வருடத்திலும், அப்பா கடந்த 2010-ம் வருடத்திலும் இறந்துவிட்டனர். எனது அக்கா செல்வராணிக்கு எங்கள் ஊரைச் சேர்ந்த திரு.பாண்டியன் என்பவருடன் 09.04.2017-ம் தேதி திருமணம் செய்வதற்கு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதுசமயம் அன்னை தெரசா ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத்தினை கேள்விப்பட்டு கடந்த 08.04.2017ம் தேதி அன்னை தெரசா ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் ரூபாய் 50,000/- மற்றும் 1 பவுன் தங்கம் நாணயம் பெறுவதற்காக விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அதனுடன் எனது தாய் லட்சுமி, தந்தை பழனிச்சாமி ஆகியோரின் இறப்பு சான்று, எனது அக்கா செல்வராணியின் கல்லூரி மாற்றுச் சான்று, மதிப்பெண் பட்டியல், எனது குடும்ப அட்டை, எனது வருமான சான்று, எனது அக்கா செல்வராணியின் பிறப்பு சான்று, சாதிச்சான்றிதழ், எனது அக்காவிற்கு திருமணம் செய்ய உள்ள திரு.பாண்டியன் என்பவரின் கல்லூரி மாற்றுச் சான்று, சாதிச்சான்றிதழ் ஆகியவற்றின் நகல், திருமண அழைப்பிதழ் மற்றும் சில ஆவணங்களை இணைத்து குஜிலியம்பாறை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்திற்கு நானும் எனது உறவினர் கணபதிராஜ் என்பவரும் சென்று ஆன்லைனில் விண்ணப்பத்தை அனுப்பி விட்டு அசல் விண்ணப்பம் மற்றும் ஆவணங்களுடன் அந்த அலுவலகத்தில் உள்ள சமூக நல பிரிவிற்கு சென்று விரிவாக்க அலுவலர் திருமதி.ரேணுகா என்பவரை சந்தித்து அசல் விண்ணப்பத்தினை கொடுத்தேன். அப்போது அவர் எனது விண்ணப்பத்தின் மீது விசாரணை செய்து தனது பரிந்துரையினை செய்து அனுப்புவதற்காக ரூ.5,000/- வேண்டும் என்றார். அதற்கு நான், ரூ.5,000/-ம் அரசுக்கு கட்டவேண்டிய பணமா என்றுக் கேட்டேன். அதற்கு அவர், நான் உங்களுக்கு என்னுடைய சிபாரிசினை செய்து உங்களுக்கு பணம் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு எனக்காகும் செலவு என்று கூறினார். பின்பு நான் அவ்வளவு பணம் என்னிடம் தற்போது இல்லை என்று கூறினேன். பின்பு எனது உறவினர் கையில் இருந்த ரூபாய்.2,500/- பணத்தை வாங்கி திருமதி.ரேணுகா அவர்களிடம் கொடுத்து விரைவாக பரிந்துரை செய்து அனுப்புங்கள் என்று கூறினேன். நானும் எனது உறவினரும் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தோம், அப்போது திருமதி.ரேணுகா விரிவாக்க அலுவலர் வெளியில் வந்து பணத்தை எண்ணாமல் வாங்கிவிட்டதாகவும், ரூ.2,500/- மட்டுமே இருப்பதாகவும் கூறினார். அப்போது நான் என்னிடம் இவ்வளவு தான் பணம் உள்ளது என்று கூறினேன். அதற்கு அவர், விசாரணைக்கு அவர் வரும் போது மீதி பணம்

ரூ.2,500/- மற்றும் கார் வாடகையும் தருமாறு கூறினார். பின்பு விசாரணைக்கு வரவே இல்லை. கடந்த 20 நாட்களுக்கு முன்பு என்னுடைய அலைபேசி எண். 9786182506-க்கு அவருடைய அலைபேசி எண்: 9944410231ல் இருந்து தொடர்பு கொண்டு பணம் ரூ.2,500/- என்னாச்சு என்று கேட்டும், மேலும் திருமணத்தை பதிவு செய்து சான்று கொண்டு வருமாறும் கூறினார். அதன்படி கடந்த 13.07.2017-ம் தேதி குஜிலியம்பாறை சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது அக்காவின் திருமணத்தை பதிவு செய்தேன். பின்னர் 24.07.2017 ம் தேதி மதியம் சுமார் 02.30 மணிக்கு குஜிலியம்பாறை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள சமூக நல பிரிவில் விரிவாக்க அலுவலர் திருமதி.ரேணுகா அவர்களை சந்தித்து விண்ணப்பம் பற்றி கேட்டேன். அப்போது அவர் ரூ.2,500/-லஞ்ச பணத்தை கொண்டு வந்திருக்கிறாயா என்று கேட்டும், பணத்தை கொடுத்தால்தான் பரிந்துரை செய்து மேலே அனுப்ப முடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். பின்பு வீட்டிற்கு வந்து பணம் புரட்ட முயன்றும் முடியவில்லை. அதனால் கொஞ்சம் குறைத்து கேட்கலாம் என்று நினைத்து மீண்டும் 25.07.2017ம் தேதி காலை 11.45 மணிக்கு விரிவாக்க அலுவலரை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தபோது பணம் ரூ.2,500/- கொண்டு வந்துவிட்டாயா என்று கேட்டார். அதற்கு நான் திருமணப் பதிவுச் சான்றை மட்டும் கொண்டு வந்துள்ளேன் பணம் புரட்ட முடியவில்லை கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன. அதற்கு அவர் கோபப்பட்டு ரூ.500/- ஐ குறைத்து ரூ.2,000/- பணம் நாளை கொண்டுவந்து கொடுத்தால்தான் உன்னுடைய விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து மேலே அனுப்ப முடியும் என கராராக கூறிவிட்டு, திருமணப் பதிவு சான்றினையும் பெற்றுக்கொண்டார். பின்பு நான், எனது அக்கா செல்வராணிக்கு அரசு வழங்கும் அன்னை தெரசா ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவி தொகையாக ரூ.50,000/- மற்றும் ஒரு பவுன் தங்க நாணயம் பெறுவதற்கு சிபாரிசு செய்து அனுப்புவதற்காக ரூ.2,000/- லஞ்சமாக விரிவாக்க அலுவலர் திருமதி.ரேணுகா அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லாததால் என்னிடம் ரூ.2,000/- லஞ்சமாக கேட்ட விரிவாக்க அலுவலர் திருமதி.ரேணுகா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு, இந்த மனுவை தயாரித்து கொடுக்கின்றேன். இத்துடன் மேற்படி அலுவலகத்தில் எனது பெயரில் கொடுத்த விண்ணப்பத்துடன் இணைத்துக் கொடுத்த மேலேசொன்ன அனைத்து ஆவணங்களின் நகல்களையும் இணைத்தும், மேலும் திருமதி.ரேணுகா அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/xxxxxx திரு.P.ஆறுமுகம், 26.07.2017. Sir, Received the complaint on 26.07.2017 at 08.15 hrs and the same was intimated to the Superintendent of Police, SR, DVAC, Chennai for necessary orders, on 26.07.2017. Sd/-xxx Tmt.R.Geetha, Inspector of Police, V&AC., Dindigul: 26.07.2017, Sir, as per the order of the Superintendent of Police, Southern range, Vigilance and Anti-Corruption, Chennai in PE.275/2017/SW/DL, dated:26.07.2017, a preliminary Enquiry was conducted, regarding the complaint. On the findings of the Preliminary Enquiry and after getting concurrence from the Superintendent of Police, Southern Range, V&AC., Chennai, the case in Dindigul V&AC., Cr.No.05/2017, u/s.7of Prevention of Corruption Act, 1988 was registered on 26.02.2017 at 13.15hrs. Sd/xxxx R.Geetha, 26.07.2017, Inspector, V&AC., Dindigul. பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு அதனுடன் இணைந்த ஆவணங்கள் மற்றும் குரல் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்று ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, திண்டுக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.